# பரிவும் பாசமும் உள்ள கலைஞர்

தயாரிப்பாளர்

## ஏ.வி.எம். சரவணன்

கலைஞர் அவர்களைப் பற்றி பேசுவதும் எழுதுவதும் ஓர் இனிமையான அனுபவம். என் பள்ளிக் கூட நாட்களில் அவருடைய வசனங்களை மனப்பாடம் செய்து பள்ளி ஆண்டு விழாக்களில் பேசி பரிசுகள் பெற்றிருக்கிறேன்.

தமிழ் மொழியில் எனக்கு ஆர்வம் ஏற்படக் காரணமாக இருந்தது அவருடைய வசனங்கள்தான் என்று கூறுவேன்.

எங்களுக்கும் அவருக்குமுள்ள தொடர்பு வியாபாரத்தையும் தாண்டியது. ஏனெனில் அவர் எங்களிடம் ஒரே ஒரு படம் "பராசக்தி" மட்டுமே அரசியலுக்கு அப்பாற்பட்டு குடும்பப் பணியாற்றியுள்ளார். எங்களை அவர் குடும்ப உறுப்பினர்களாகவே எண்ணினார்.

அவர் ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் எங்கள் வீட்டு மற்றும் அலுவலக நிகழ்ச்சி எதுவாக இருந்தாலும் தவறாமல் எங்கள் அழைப்பை ஏற்றுக் கலந்து கொள்வார். அதேபோல் நான் அவரைச் சந்திக்க நேரம் கேட்கும் போதெல்லாம் காக்க வைக்காமல் உடனடியாக நேரம் ஒதுக்கி என்னை அழைப்பார்.



எங்கள் தொழிலாளிகள் வசிப்பதற்காக ஏ.வி.எம். காலனியை எங்கள் அப்பச்சி ஏற்படுத்திய உடன் அதனைத் திறந்து வைக்க அப்போதைய முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்களை - அமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள் மூலம் தொடர்பு கொண்டு இருவரையும் அழைத்து தொழிலாளர் குடியிருப்பை 1967 ஆம் ஆண்டு மே மாதத்தில் திறந்து வைத்தார்.

1971-ல் தொழிலாளர்கள் வீட்டுப் பெண்கள் 25 பேருக்கு திருமணம் செய்து வைக்க வேண்டும் என அப்பச்சி விரும்பினார். உடனே கலைஞரைத் தொடர்பு கொண்டு; அவரே தாலி எடுத்துக் கொடுக்க மிகச் சிறப்பாக அத்திருமணங்களை கலைஞர் நடத்திவைத்து சிறப்புச் செய்தார்.

அதே நிகழ்ச்சியில் திரையுலகில் யாரும் செய்யாத ஒரு அற்புதத்தை அப்பச்சி செய்ய விரும்பினார். அதன்படி அனைத்துத் தொழிலாளர்களுக்கும் இன்சூரன்ஸ் பாலிசி எடுத்துக் கொடுத்து அதையும் கலைஞர் கையில் தொழிலாளர்களுக்கு வழங்கி மகிழ்ந்தார்.







08.03.1997 அன்று "ஏ.வி.எம்." நிறுவனத்தின் பொன் விழாவில் தலைமையேற்று சுமார் 190 பேருக்குக் கேடயம் வழங்கிக் கௌரவிக்க வேண்டும்" என்று கலைஞர் அவர்களைக் கேட்டுக் கொண்டோம். "உடல் நிலை காரணமாக எல்லாருக்கும் இயலாது, ஒரு ஐம்பது பேர்களுக்கு மட்டும் தரலாம்.." என்ற அவரது யோசனையை நாங்கள் ஏற்றுக்கொண்டோம்.

கலைஞர் வந்தார். விழா மேடையில் அமர்ந்தார். விழா தொடங்கியது. மேடையில் இருந்தவர்களைப் பார்த்தார். கூட்டத்தைப் பார்த்ததும், அந்த நாள் ஞாபகங்கள் அவர் நெஞ்சினில் அணிவகுத்திருக்க வேண்டும். அனைவரையும் பாசத்துடன் விசாரித்து நினைவுகளை அசைபோட்டார்.

தன்னுடைய உடல் நலக் குறைவை அவர் உணரவே இல்லை. அனைவருக்கும் அவர் கையால் கேடயங்கள் வழங்கிக் கௌரவித்தார். அத்தனை பேரும் அவருக்குத் தெரிந்த கலைஞர்கள். விழா உணர்ச்சிபூர்வமாக அமைந்தது. கலைஞர்கள் நெகிழ்ந்து போனார்கள்.

தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபை வளாகத்தில் எங்கள் தந்தையார் அவர்களின் நூற்றாண்டு தொடங்கியபோது 30.07.2006 அன்று பிலிம் சேம்பரில் அப்பச்சி அவர்களின் சிலையையும் கலைஞர் அவர்கள் திறந்துவைத்தார்.

22.01.2006 அன்று ஏ.வி.எம். நினைவு அஞ்சல் தலையை கலைஞர் அவர்கள் தலைமையில் அன்றைய மாண்புமிகு மத்திய அமைச்சர் தயாநிதி மாறன் வெளியிட நானும் என் மகன் எம்.எஸ்.குகனும் பெற்றுக் கொண்டோம். தமிழ் திரைப்படத் தயாரிப்பாளர் ஒருவருக்கு அஞ்சல் தலை வெளியிடுவது அதுவே முதல் முறை. விழாவாக நடத்த வேண்டாம் என்று எண்ணியிருந்தோம். ஆனால் கலைஞர் அவர்கள்தான் பெரிய அளவில் நடத்த வேண்டும் என்று கூறி 3000 பேர் அமரக்கூடிய ஏ.வி.மெய்யப்பன் மெட்ரிகுலேஷன் பள்ளி ஆடிட்டோரியத்தில் நடத்தினோம்.

கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது 01.07.1989இல் சினிமாவிற்கு விதித்திருக்கும் வரியை 54%லிருந்து 40%ஆக குறைத்தார்கள். 01.08.1998இல் 40%லிருந்து 30%ஆக குறைத்தார்கள். 12.06.2000இல் 30%லிருந்து 25%ஆக குறைத்தார்கள்.

22.07.2006-ல் தமிழில் பெயர் வைக்கப்படும் படங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து முழுவதுமாக விலக்களித்தார்கள்.

இது அவருக்கு நல்ல தமிழ்ப் பெயர்களில் படங்கள் வரவேண்டும் என்ற ஆர்வத்துக்கு உதாரணமாக அமைந்தது.

80 ஆண்டுகளை நெருங்கி இந்தியாவிலேயே இன்றளவும் இயங்கிக் கொண்டிருக்கும் ஒரே ஸ்டுடியோ எங்கள் ஏ.வி.எம். ஸ்டுடியோதான். இதற்கு முக்கிய காரணம் கலைஞர் அவர்கள். அவர் இல்லையென்றால் இது சாத்தியமில்லை.

இப்படி ஏராளமான செய்திகளைச் சொல்லிக் கொண்டே போகலாம். அரசியலையும் தாண்டி மனிதநேயமிக்க மாபெரும் மனிதர் அவர். அவர் புகழ் என்றென்றும் வாழ்க!

# கலைஞரின் காலத்தால் அழியாத காலச் சுவடுகள்!



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்த் திரை உலகில் நிகழ்த்திய சாதனையை யாராலும் முறியடிக்க முடியாது. தமிழ்த் திரை உலகம் பழைய பஞ்சாங்கமாக இருந்தபோது, தமிழ்த்திரை உலக திரைப்படங்களை மக்கள் சிந்திக்கும் வகையில், அறிவு சார்ந்த வகையில், தனது எழுத்தாற்றலால் வெளிப்படுத்தியவர். அவரது எழுத்துக்கள் இளைஞர்கள் மனதில் ஆழப்பதிந்தன. அவரது திரைஉலகப் பங்களிப்பை இங்கே தொகுத்து வழங்கியிருக்கிறோம்.

(1) ராஜகுமாரி - வசனம் 11.04.1947
(2) அபிமன்யூ - வசனம் 06.05.1948
(3) மருதநாட்டு இளவரசி - வசனம் 02.04.1950
(4) மந்திரிகுமாரி - கதை, வசனம் பாடல்கள் 24.06.1950
(5) தேவகி - கதை , வசனம் 21.04.1951
(6)மணமகள் - திரைக்கதை, வசனம் 15.08.1951
(7)ஆடஜெனமா (தெலுங்கு) கதை, திரைக்கதை 24.11.1951
(8)பராசக்தி - திரைக்கதை, வசனம், பாடல் 17.01.1952
9) பணம் - திரைக்கதை, வசனம் 27.12. 1952
10) நாம் - கதை, வசனம் பாடல் 05.03.1953
11) திரும்பிப்பார் - கதை, வசனம் 10.07.1953
12)மனோகரா - திரைக்கதை, வசனம் 03.03.1954
13) மனோகரா (இந்தி) திரைக்கதை 22.05.1954
14) மனோகரா (தெலுங்கு) திரைக்கதை 03.06.1954
15)மலைக்கள்ளன் - திரைக்கதை வசனம் 22.07.1954
16) அம்மையப்பன் - கதை, வசனம், பாடல் 24.09.1954
17) ராஜா ராணி - கதை, வசனம், பாடல் 25.2.1956
18) ரங்கோன் ராதா - திரைக்கதை, வசனம், பாடல் 01.11.1956
19) பராசக்தி (தெலுங்கு) திரைக்கதை 11.01.1957
20)புதையல் - கதை, வசனம்10.05.1957
21) வீரகங்கணம் (தெலுங்கு) கதை, திரைக்கதை 16.05.1957
22) புதுமைப்பித்தன் - கதை, வசனம் 02.08.1957
23) குறவஞ்சி - கதை, வசனம், பாடல்04.03.1960
24) எல்லோரும் இந்நாட்டு மன்னர் - கதை, வசனம் 01.07.1960
25) அரசிளங்குமரி - கதை, வசனம் 01.01.1961
26) தாயில்லாப் பிள்ளை - திரைக்கதை, வசனம் 18.08.1961
27) இருவர் உள்ளம் - திரைக்கதை, வசனம் 29.03.1963
28) காஞ்சித்தலைவன் - கதை, வசனம், பாடல்26.10.1963
29) பூம்புகார் - கதை, திரைக்கதை வசனம் 18.09.1964
30) பூமாலை - கதை, வசனம், பாடல் 26.10.1965
31) அவன் பித்தனா? - திரைக்கதை, வசனம், பாடல்12.08.1966
32) மறக்க முடியுமா? - திரைக்கதை, வசனம், பாடல் 12.8.1966
33) மணிமகுடம் - கதை, வசனம் 09.12.1966
34) தங்கத் தம்பி - கதை, வசனம் 09.01.1967
35) வாலிப விருந்து - கதை, வசனம் 02.06.1967
36) ஸ்திரீ ஜென்மா (தெலுங்கு) கதை, திரைக்கதை 31.08.1967
37) எங்கள் தங்கம் - கதை 09.10.1970
38) பிள்ளையோ பிள்ளை - கதை, வசனம் 23.06.1972
39) பூக்காரி - தயாரிப்பு 25.10.1973
40) அணையா விளக்கு - கதை 15.08.1975



41) வண்டிக்காரன் மகன் - திரைக்கதை, வசனம் 30.10.1978
42) நெஞ்சுக்கு நீதி - கதை, வசனம், பாடல் 27.4.1979
43) ஆடு பாம்பே - கதை, வசனம் 30.06.1979
44) அம்மாயி மொகுடு மாமாகு யமுடு (தெலுங்கு) திரைக்கதை20.11.1980
45) குலக்கொழுந்து - கதை, வசனம் 23.01.1981
46) மாடி வீட்டு ஏழை - திரைக்கதை, வசனம் 22.08.1981
47) தூக்குமேடை - கதை, வசனம், பாடல் 28.05.1982
48) இது எங்க நாடு - தயாரிப்பு 25.02.1983
49) திருட்டு ராஜாக்கள் - தயாரிப்பு 02.03.1984
50) காவல் கைதிகள் - தயாரிப்பு 23.10.1984
51) குற்றவாளிகள் - தயாரிப்பு 07.06.1985
52) காகித ஓடம் - தயாரிப்பு 14.01.1986
53) பாலைவன ரோஜாக்கள் - திரைக்கதை, வசனம்01.11.1986
54) நீதிக்கு தண்டனை - திரைக்கதை, வசனம்01.05.1987
55) ஒரே இரத்தம் - கதை, வசனம், பாடல் 08.05.1987
56) வீரன் வேலுத்தம்பி - கதை, வசனம் பாடல்03.06.1987
57) சட்டம் ஒரு விளையாட்டு - திரைக்கதை, வசனம் 21.10.1987
58) புயல்பாடும் பாட்டு - திரைக்கதை, வசனம் 21.10.1987
59) மக்கள் ஆணையிட்டால் - திரைக்கதை, வசனம், பாடல்29.01.1988
60) பாசப்பறவைகள் - திரைக்கதை, வசனம் 29.04.1988
61) இது எங்கள் நீதி - திரைக்கதை, வசனம், பாடல் 08.11.1988
62) பாடாத தேனீக்கள் - திரைக்கதை, வசனம், பாடல்08.11.1988
63) தென்றல் சுடும் - திரைக்கதை, வசனம் 10.03.1989
64) பொறுத்தது போதும் - திரைக்கதை, வசனம் 15.07.1989
65) நியாயத்தராசு - திரைக்கதை, வசனம் 11.08.1989
66) பாச மழை - கதை, வசனம் 28.10.1989
67) காவலுக்கு கெட்டிக்காரன் - திரைக்கதை , வசனம்14.01.1990
68) மதுரை மீனாட்சி - திரைக்கதை, வசனம், பாடல்24.02.1993
69) புதிய பராசக்தி - திரைக்கதை, வசனம் 23.03.1996
70) கண்ணம்மா - திரைக்கதை, வசனம், பாடல் 04.02.2005
71) மண்ணின் மைந்தன் - திரைக்கதை, வசனம், பாடல்05.03.2005
72) பாசக்கிளிகள் - திரைக்கதை, வசனம், பாடல்14.01.2006
73) உளியின் ஓசை - திரைக்கதை, வசனம், பாடல் 04.07.2008
74) நீயின்றி நானில்லை - திரைக்கதை, வசனம், பாடல் 28.06.2009
75) பெண்சிங்கம் - திரைக்கதை, வசனம், பாடல் 03.06.2010
76) இளைஞன் - திரைக்கதை, வசனம், பாடல் 15.01.2011
77) பொன்னர் சங்கர் - திரைக்கதை, வசனம், பாடல்09.04.2011

உலக வரலாற்றிலே திரைத்துறையில் கதை, திரைக்கதை, வசனம், தயாரிப்பு என்று 77 படங்களுக்கு தன்னுடைய பங்களிப்பை அளித்து, மாபெரும் சாதனையை திரை உலகில் நிகழ்த்திக் காட்டியவர் கலைஞரைத் தவிர வேறு ஒருவரை காண்பது அரிது!

# "புதையல்" - திரைப்படத்தில்!



ஓரணா நாணயத்தின் விளிம்பைப் போல சுருண்ட கூந்தல்!

எலிக்கு, பூனை எங்காவது விவாகம் செய்து வைத்தது என்று கேள்விப் பட்டிருக்கிறாயா? விளையாடுவதற்கு வேங்கை, மானைப் பிடிப்பதில்லை என்று விளங்குகிறதா?

மாணிக்கத்தால் தொட்டிலும், மரகதத்தால் பாலாடையும் செய்து கொடுக்கிறேன், ஒரு பிள்ளை பெற்றுக் கொடு என்று மலடியிடம் கேட்டானாம் ஒரு மடையன்!

புலியின் பசிக்கு ஆடுகளைத்தான் கொடுக்க முடியும் சர்க்கஸ்காரனால்; அதைவிட்டு, தானே இரையாக முடியுமா ?

- கலைஞர்